பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
10 09 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. உலகளாவிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உள்ளூர் அளவில் ஏற்படுத்தும் வழிவகைகளை ஆராய வேண்டும் என பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. இணையவழி குற்றங்களை தடுக்க அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐயாயிரம் சைபர் கமாண்டோக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் மின்சார வாகனங்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.
4. இந்தியாவுடனான வர்த்தக ஒத்துழைப்பில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
5. பாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

[]<<<>>>[]

உலகளாவிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உள்ளூர் அளவில் ஏற்படுத்தும் வழிவகைகளை ஆராய வேண்டும் என பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் முதலாவது நிர்வாகக்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், அறிவியல் துறையினரின் முயற்சிகளுக்கு அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொடர்பான தகவல்களை கண்காணித்து அவற்றை மேம்படுத்த பிரத்யேக தளத்தை உருவாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கிற்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.

அடல் திங்கரிங் ஆய்வகங்கள், ஆய்வுப் பணிகளில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

[]<<<>>>[]

இணையவழி குற்றங்களை தடுக்க அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐயாயிரம் சைபர் கமாண்டோக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்திய இணையவழி குற்றத்தடுப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் முதலாவது ஆண்டு நிறுவன தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், நாட்டின் முன்னேற்றத்திற்கு இணைய பாதுகாப்பு அவசியம் என்று கூறினார்.

டிஜிட்டல் பணபரிவர்த்தனைகளும், இணையதள செயல்பாடும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் விழிப்புடன் அவற்றை கையாள வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ள மூன்று புதிய குற்றவியல் சட்டங்களில் இணையதள குற்றங்கள் தொடர்பாக கூடுதல் அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய இணையவழி குற்ற தடுப்பு ஒருங்கிணைப்பு மையம், நாடு தழுவிய விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்க உள்ளதாகவும் இதில் அனைத்து மாநிலங்களும் பங்கேற்க வேண்டுமென்றும் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நாட்டில் மின்சார வாகனங்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய வாகன உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆண்டு கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஆண்டுக்கு ஒரு கோடி என்ற அளவில் மின்சார வாகன விற்பனை எண்ணிக்கை 2030-ஆம் ஆண்டுக்குள் எட்டப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இத்துறையில் ஐந்து கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதுவரை 30 லட்சம் மின்சார வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நான்கு சக்கர மின்சார வாகனங்கள் விற்பனை 45 சதவீதமும், இருசக்கர வாகனங்கள் விற்பனை 56 சதவீதமும் அதிகரித்துள்ளதாக திரு நிதின்கட்கரி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி, வாகன தொழில்துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார்.

இத்துறை பொருளாதாரத்தில் ஆறு புள்ளி எட்டு சதவீத பங்களிப்பை கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் இத்துறையின் மேம்பட்டிற்கு முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா உலகளாவிய வாகன உற்பத்தி மையமாக உருவாகி வருகிறது என்று திரு குமாரசாமி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியாவுடனான வர்த்தக ஒத்துழைப்பில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முக்கிய நாடாக திகழ்கிறது என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற இந்தியா — ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வர்த்தக மன்றக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு நீண்டகாலமாக வலுவாக இருப்பதாகக் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்பு, முதலீடு, நீடித்த வளர்ச்சி ஆகியவற்றில் இருநாடுகளும் ஒத்துழைப்பை மேம்படுத்த இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய வர்த்தக அமைச்சகமும், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொருளாதார அமைச்சகமும். அந்நாட்டு தூதரகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில் அபுதாபியின் இளவரசர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இரு நாடுகளைச் சேர்ந்த தொழில்துறையினரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

அமெரிக்க சென்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி சீக்கிய சமூகத்தினர் குறித்து பேசிய கருத்துக்கு மத்திய அமைச்சர் திரு ஹர்தீப்சிங் பூரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் சீக்கியர்களின் உரிமைகள் குறித்து தவறான தகவல்களை தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

வெளிநாட்டில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவரது பேச்சு அமைந்துள்ளது என்று திரு ஹர்தீப்சிங் பூரி குற்றம்சாட்டினார்.

இதனிடையே இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு கிரிராஜ்சிங், இந்தியாவின் நற்பெயருக்கு களங்கும் ஏற்படுத்தும் வகையில் திரு ராகுல்காந்தி வெளிநாடுகளில் தொடர்ந்து கருத்துக்களை தெரிவித்து வருவது கண்டனத்திற்குரியது என்றார்.

தேசத்தின் நலன்களுக்கு எதிராக அவர் செயல்பட்டு வருவதாக அமைச்சர் குற்றம்சாட்டினார்.

1984-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின்போது சீக்கியர்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறிய திரு கிரிராஜ் சிங், கடந்த பத்து ஆண்டுகளில் சீக்கியர்களின் நலனுக்காக பிஜேபி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடைபெற்ற பிஜேபி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாவட்டத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) ---39 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இரண்டாவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி இன்று வெளியிட்டுள்ளது.

இதில் 21 வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

கட்சியின் மூத்த தலைவர்கள் திரு யோகேஷ் பைராகி- ஜூலானா தொகுதியிலும், திரு கிருஷ்ணா கெலாவட் ராய் தொகுதியிலும், திரு நஸீம் அகமது பெரோஸ்பூர் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

இதனிடையே அம்மாநில முதலமைச்சர் திரு நயப் சைனி இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அம்மாநிலத்தின் லத்வா தொகுதியில் அவர் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் ஆம் ஆத்மி கட்சி ஒன்பது பேர் கொண்ட இரண்டாவது வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிட்டுள்ளது.

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மனு தாக்கல் நாளை மறுநாள் நிறைவடைகிறது.

**[]<<<>>>[]**

ஆகாஷவாணியின் மைசூர் நிலையம் இன்று 90-வது ஆண்டு விழாவை கொண்டாடியது.

1935-ஆம் ஆண்டு இதே நாளில் அந்த நிலையம் தொடங்கப்பட்டது.

இந்நாளையொட்டி மைசூர் நிலயத்தின் சார்பில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மைசூர் நிலையத்தின் சார்பில் ஒலிபரப்பப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் குறித்தும் அதன் சாதனைகள் குறித்தும் நேயர்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளும் இன்று ஒலிபரப்பு செய்யப்பட்டன.

**[]<<<>>>[]**

உக்ரைன் செலுத்திய 144 ட்ரோன்களை ஒரே இரவில் தடுத்து அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மாஸ்கோ உள்ளிட்ட ஒன்பது இடங்களை குறிவைத்து உக்ரைன் இவற்றை செலுத்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

இதன் காரணமாக மாஸ்கோ விமான நிலையம் ஆறு மணி நேரம் மூடப்பட்டதாகவும், 50 விமானங்கள் திருப்பிவிடப்பட்டதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-1, 6-2 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Claudio renardi** -ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுவன் நாந்தல் - இங்கிலாந்தின் **Ali habib** இணையும், சாய் கார்த்திக் - ரஷ்யாவின் **Bogdan bobrov** இணையும் காலிறுக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

இந்த இணை 21-14, 21-13 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் **Polinea – Yevheniia** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Alap Mishra,** பரத் ராகவ், **Satishkumar** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளில் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்விதா ஈஸ்வரமூர்த்தி - ஜப்பானின் கன்னா **Soeda** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**End of News**